
# கார்த்திகேயனின்

# காயகற்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயகற்பம்

எப்பொருளும் மெய்ப்பொருளாய்
இப்புவியோர் தாமுணர
வைப்பாய் கணபதியே முன் வந்து.

ஆக்கம்

**தவத்திரு. கார்த்திகேசு சுவாமிகள்**

தத்துவ ஞானத் தவச்சாலை வெளியீடு
கொழும்பு அருளொளி நிலையம்
31/21, டோசன் வீதி, கொழும்பு - 2.
தொலை பேசி - 331439

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்பதிப்பு -ஐப்பசி 1996


## பொருளடக்கம்

1. காயகற்பம்
2. சமாதி
3. மெய்யிலே மெய்
4. மெய்யிலே தெய்வம்
5. காலனை வெல்லலாம்
6. யோகமும் ஞானமும்
7. வர்ணாச்சிரமம்
8. தந்தை சொல் மந்திரம்

ஸ்ரீ.கார்த்திகேசு சுவாமிகள் நூற்றாண்டு
நினைவு வெளியீடு – 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருக்கால் உனது பெயர் ஓதினால் அன்பின்
பெருக்கால் ஆனந்தம் பெருகுதே –திருக்கார்த்தி
கேயா அசுரருடல் கீண்டவடிவேற் காங்
கேயா நின்றாளே கெதி.

கார்த்திகேயா வெனவுன்றிரு நாமம்
புகன்றாலுங், கண்களாரப்
பார்த்தாலும், பணிந்தாலும், படித்தாலும்,
பக்தியொடு பாடிப்பாடி
யார்த்தாலும், அணைத்தாலும் அத்தனைகுந்
தித்திக்கு மமுதே நின்பாற்
சேர்த்தாளுந் திருவடிக்கே தெண்டனிட்டேன்
அன்புடை சேயன் நானே.

– அய்யாச் சாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈப்போ அருளொளி மன்றத் திறப்பு விழாவிற்கு கொழும்பு அருளொளி நிலையம் சார்பாக வரைந்தனுப்பிய ஆசிமடல்

# காயகற்பம்

மலேசிய அருளொளி மன்றத் திறப்பு விழா ஆசான் அருளால் சிறப்புற நிகழும். குறை அணுகாது. அதற்கு எமதுளம் உவந்த வாழ்த்துகள். அருளொளி மன்றமும், அதன் ஆசானும், அமைப்பாளர்களும், தொண்டர்களும் நீடுவாழ்ந்து நிலைபெற்ற செல்வம் எய்தி, பேர் புகழுடன் இலங்கிப் பேரின்பமுறுவார்களாக!

அன்பர்களே! அன்னை அருளொளி மாதாவின் கிருபைக்காளாகவேண்டில் அவரின் திருப்பணியில் ஈடுபடுதலே சிலாக்கியம். அப்பணிக்கு அங்கத்தவர்களைச் சேர்த்து மேன்மையுறச் செய்தலே முக்கியம்.

மன்றம், வணக்கத்திற்கும் ஒடுக்கத்திற்குமுரிய இரு பாகங்களாகப் பகுக்கப்படல் வேண்டும். வணக்கத்திற்குரிய பாகம் போதனா பீடமாகவும் ஒடுக்கத்திற்குரிய பாகம் சமயவுணர்வில் அதிதீவிர பக்குவிகள் ஞான ஒடுக்கத்திற்கும் ஒழிவிலொடுக்கத்திற்கும் உரிய சாதனைகள் பயிலும் பரிசுத்தமான இடமாகவும் அமைதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு எமது ஞானத் தந்தையாரின் தியான நிலையில் உள்ள திருவுருவப்படம் அல்லது ஓங்கார பிரணவத் துள்ளொளிக்குள்ளே முருகன் வேலுருவில் அமைந்த சித்திரப்படம் ஒன்றிருத்தல் நலம்.

இம்மன்றத்தைச் சீவனைச் சிவனாக்கும் மன்றம், அஞ்ஞானியை மெஞ்ஞானியாக்கும் மன்றம், மக்களைத் தேவராக்கும் மன்றம் என்றுங் கூறலாம்.

நேயர்களே! காமம், கோபம், பிரமை இம்மூன்றும் காலன், இயமன், தூதன் என்றும் பேறு, இளமை, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு இவ்வாறுங் கருவில் அமைப்பென்றும் இருள்சேர் இருவினையும் இன்ப துன்பங் களுக்குக் காரணமென்றும் இவை யாவற்றுக்கும் பிரேமை (பேராசை)யே மூலகாரணமென்றும் உணர வேண்டும். வஞ்சக மனத்தினாசை மாற்றிய பெரியோரே தேவர்கள்.

"தேவராய் மாற விரும்புவோர் மறுபடியும்
சேய் போல் மாற்றிப் பிறக்க வேண்டும்"
என்கிறார் ஏசுநாதர்.

" சேய் போலிருப்பர் கண்டீர் உண்மை ஞானந்
தெளிந்தவரே"
என்கிறார் பட்டினத்தடிகள்.

எம் குருநாதர் அருட்திரு சித்திரமுத்தடிகள் ஒரு சேய் போலச் செல்லமாகப் பேசும் போது ஒரு தனி அழகுடன் மிளிர்கிறார். அவரைப்போல் வளர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பிள்ளை வாழ்க்கைப் பட்டுஞ் சின்னப் பிள்ளை எனுந் தன்மையில் மாசற்ற கொள்கையினராய் எவரால் வாழமுடியும்?

"மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால்
ஈசனைக் காட்டும் உடம்பு"
என்கிறார் ஒளவைப் பிராட்டியார்.

1954ம் ஆண்டு சுவாமி அவர்கள் முதன் முதல் இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரைக்காண வந்த புலவர் ஒருவர்.

"அருள் ஒழுகும் விழி கண்டேன் அன்பொழுகும்
முகம் கண்டேன் அறிவு கண்டேன்,
உருளு மனத்தடியேனை உளமதனில்
ஊக்குவிக்கும் உண்மை கண்டேன்,
சுருளு சடைத் திருமுனிவர் சித்ர முத்து
அடிகளெனுந் தூய்மை கண்டேன்,
எருள் வயிர யோக நெறி எண்டிசைக்கும்
இசைப்பிக்கும் இறையோன்தானே:
என்று பாடினார்.

திடவைராக்கியமும், விசுவாசமுங் கொண்டு சற்குருநாதன் காட்டுஞ் செந்நெறியில் ஒழுகுவோர் எவரும் அவரே தாமாவர் என்பது உறுதி.

"நெறிபட்ட சற்குரு நேர் வழி காட்டிற்
பிரிவற்றிருக்கும் சிவம்"
என்றார் ஒளவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நெற்றிக் கண்ணைத் திறந்து நிமலன்
ஒளிவடிவை உற்றுப் பாரென்பர் குரு"
என்றார் சித்திரமுத்தடிகள்.

இதுவே தத்துவமசி. இதன் பொருள் தத்–பரப்பிரமம், துவம் – ஜீவாத்மாவாகிய நீ, மசி – ஆகிறாய் என்பதாகும். இதை,

" ஆனா அமுதே அயில்வே லரயே
ஞான கரனே நவிலத் தகுமோ
யானாகிய என்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலை நின்றது தற்பரமே"
என்றார் அருணகிரியார்.

இத்தகைய தத்துவசொரூபனைச் சற்குருநாதனாகப் பெற்ற நீங்கள் பெரும் பாக்கியசாலிகள்.

மெய்த்தொண்டர்களே! கேளுங்கள். எண்சாண் உடம் பிற்கும் சிரசே பிரதானம் என்பர். சிரசு தலையின் மேற்பாகமா யுள்ளது. தலை ஞான காண்டத்திற்கும், முண்டம் கன்ம காண்டத்திற்கும் உரிய பாகங்களாகும். தலையைக் குருசேத்திரமாக வர்ணிக்கிறது மகாபாரதம்.

தலை ஓங்கார சொரூபமாயுள்ளது. அகார, உகார, மகாரம் மூன்றும் சேர்ந்தது ஓங்காரம். இதுவே ஏகாட்சரம் என்ற பிராணவமாகும். சடநிலையில் (அ) காரம் பிரமாவையும், (உ) காரம் விஷ்ணுவையும், (ம) காரம் உருத்திரனையுங் குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சரநிலையில்* இரேசகம் பிரமாவையும், பூரகம் விஷ்ணுவையும், கும்பகம் உருத்திரனையும் குறிக்கும். கும்பித்த இடபிங்கலைகளை அக்கினி கலையாய் மாற்றி ஏகஞ்செய்த நிலையே (வ) காரமாகிய மகேசனாகும். இதை ஔவையார் "சத்தியாஞ் சந்திரனைச் செங்கதிரோன் ஊடுருவில் முத்திக்கு மூலம் அது" என்று கூறியுள்ளார். ஒளிமயமான அக்கினி கலையை சுழிமுனை வழியாக சிரசிற் கேற்றிய நிலையே (ய) காரமாகிய சதாசிவமாகும்.

இவ்வண்ணம் பாகுபாடு பெற்ற பஞ்ச முகூர்த்தங் களும், அவைகளைக் குறிக்கும் பஞ்சாட்சரங்களும் ஏகாட்சரமாகிய பிரணவத்தில் அடக்கமென்று அறிக.

வாய்மையில் நாவே பிரமனையும், உண்ணாவே விஷ்ணுவையும், உண்ணாவை ஊடுருவி நாசியுள் வெளி யில் புக்குநின்ற நாவே நினைத்தவுடன் முத்தி நல்கும் அண்ணாமலையையும், சிவனெனும் உருத்திரனையும், ஆவுடையார் இலிங்கத்தையும், பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரனையும், ஓங்காரத்துள் வெளிக்குள்ளே முருகனுருவாய் நின்ற – வேலை – தானாகிய ஆன்மாவை – நாதனையும் குறிக்கும்.

இதையே (இந்தத் தன்னிற் கண்ட தானான தத்துவ நிலையை) ஆதி மனிதனாகிய தமிழன் தனது மானத பூசைக்குரிய திருவுருவாய்ப் பாவித்துவந்தான். பிற்காலத்தில் இது பலரிடத்தில் மறைந்துவிட்டது. மறைந்ததால் அறிஞர்கள் அதை முற்றும் மறைந்து போகாதிருத்தற்கு உலகில் ஆலயங்களை நிறுவி, அவைகளில் திருவுருவங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சிலாரூபஞ் செய்துவைத்தார்கள். அவை நாளடை வில் சிந்தனையற்ற மக்களுக்கு மிருகங்களைப் பலியிடும் மேடைகளாகவும் சூதாட்டரங்கங்களாகவும் தாசிகளின் நடனசாலைகளாகவும் பொருளீட்டும் வியாபாரத் தலங் களாகவும் மாறின. இதை நன்குணர்ந்து

" நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே
சுத்திவந்து மொணமொணென்று சொல்லுமந்திர மேதடா,
நட்டகல்லுப் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்,
சுட்டசட்டி சட்டுவங் கறிச்சுவை யறியுமோ."

என்றார் சிவவாக்கியர்.

" சினமிறக்கக் கற்றாலுஞ் சித்தியெலாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே"

என்றார் தாயுமான சுவாமிகள்.

" விக்கிரகத்தைத் தெய்வமாக வணங்காதீர்கள். உங்க ளிடத்திலிருந்து காணாமல்போன ஒட்டகத்தை அது எங்கிருந்தாலுந் தேடிக் கண்டுபிடியுங்கள்"

என்றார் நபிகள் நாயகம்

" தன்னாசிக் குள்ளே சிவசிவமானத்தைத்
தானாட மாட்டாமல் மானிடக்கூட்டங்கள்
சன்னாசியென்று கிரிசுற்றிக் கோயிலில்
தானாடிப் பாடித் தவம் செய்வோன் பேயன்"

என்றார் ஞானமதியுள்ளான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" தன்நாவில் ஓர்விரலைத் தாண்ட அறியாமல்
சாகரமுந் தலம்பலவுந் தாண்டியலைகின்றார்
என்னே இம்மாந்தர் மதி "
என்றார் மனோன்மணீய ஆசிரியர்.

தெய்வீக மக்களே! இன்னும் கேளுங்கள். மனதைத் தனக்கு உறுபொருளாய்க் கொண்டவன் மனிதன். அவனுக்கு அவனது விரிந்த மனம் குவிந்தால் மாதவ மாகவும், வாயுவாகவும், மன்னுயிராகவும், மனம் விரிந்து உரை மாண்டிடும் முத்தியாகவும் அமையும்.

" மனம் விரிந்து குவிந்தது மாதவம்,
மனம் விரிந்து குவிந்தது வாயுவும்,
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்,
மனம் விரிந்து உரைமாண்டது முத்தியே"
என்று திருமூலர் இதை விளக்குவார்.

உரைத்தல் – சொல்லுதல் அல்லது பேசுதல். நாவுக்கு உரியதொழில். நாவைப் பேசுமெழுத்தென்பர். பேசு மெழுத்தொன்று உண்டெனில் பேசாவெழுத்தும் ஒன்றுண்டு என்பது அனுமானிக்கத்தக்கது, இதை ஊமை எழுத்து என்பர். ஊமை எழுத்து சுவாசம் நின்றியங்கும் நாசியே.

" பேசுமெழுத்திதென்றும் பேசாவெழுத்திதென்றும்
ஆசான் அருள் புரிந்தால் தங்கமே ..........................
.............................."
என்றொருவர் பாடியுள்ளார்.

உரை மாண்ட நிலையே முத்தி. இவ்வற்புத நிலையே சித்துகளில் எல்லாம் பெருஞ்சித்து. இந்நிலையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஊமையெழுத்தொடு பேசு மெழுத்துறில்,
ஆமையகத்தினில் ஐஞ்சு மடங்கிடும்,
ஓமைய முற்றது உள்ளொளி பெற்றது,
நாமயமற்றது நாமறியோமே"

என்றார் திருமூலர்

ஆகக்கோவிலில் வணக்கத்திற்குரிய இடம் வாய் – ஆதாரம் ஆகவும், ஞானவொடுக்கத்திற்குரிய இடம் நாசியின் உள்வெளி – நிராதாரம் ஆகவும், ஒளிவிலொடுக் கத்திற்குரிய இடம் கபாலம் – மீதானம் ஆகவும் அமையும். இவை முறையே சாமீப, சாரூப, சாயுச்சிய பதங்களைக் குறிக்கம். விரிவஞ்சி விடுவதாம்.

நாதன் என அழைக்கப்படும் அருகதையுடைய புத்த பகவான், ஏசுநாதன், நபிநாயகம் முதலியோரின் உபதேச மொழிகளை நன்கு கற்று அவைகளுக்குள் பேதம் பாராட் டாது ஒரு தாய் பிள்ளைகள் போல் ஒருவரையொருவர் நேசித்து வாழ்வதே உலகில் சாந்தி, சமாதானத்தை உண்டாக்கி சுவர்க்க பூமியாய் மிளிரச்செய்ய ஒரேவழி.

திருத்தொண்டர்களே! நீங்கள் யாபேரும் ஆசான் அருள்கொண்டு, மேற்கூறியவைகளை நன்கு விளங்கிச் சாதனை செய்து

" காம கோபப் பெரும் புலி வாழுங் கன்ம காண்ட
எனுங் காடு வெட்டி ஓமெனும் பொருள் தன்னை
உணர்ந்தே உண்மை ஆனார்க்கொரு குறையுண்டோ"
என்ற தத்துவராய சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடலுக்கமைய ஒரு குறையுமின்றி வாழுங்கள், வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

அவனில்லம் அல்லது அவனுக்கு அங்கில்லை
அவனுக்கும் வேறில்லம் உண்டா அறியின்
அவனுக்கு இவனில்லம் என்றென் றறிந்தும்
அவனைப் புறம்பென்று அரற்று கின்றாரே.

என்றார் திருமூலர்.

" நாடி நாடி நாதனை நயந்து பாரும் உம்முளே
ஓடியோடி மீளுவாரை உம்முளே யடக்குவீர்
தேடிமேவு காலனுந் திகைத்து நின்றுபோய்விடும்
கோடி கோடி காலமும் குறைவிலா திருப்பீரே"

என்றார் சிவவாக்கியர்.

நானும் அதையே அரற்றி அமைகிறேன்.

வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதி

இறைவன் எல்லாமாய் அல்லவுமாய் எங்கும் நிறைந்திருக்கிறான். அவன் இல்லாத இடமேயில்லை.

" அன்னையுந் தந்தையாகி அரமகள் பெண்டீராகிப்,
பின்னையும் பிறப்புமாகிப் பெற்றதோர் பிள்ளையாகி,
முன்னையும் மூத்தோராகி முனிவருக்காதியாகி,
என்னையும் ஆண்டோனாகி இருக்கின்றான் இறையோன் தானே."

என்றோர் ஞானி வழுத்தினார்.

"இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாயெறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்டமூர்த்தியாகி,
பெருநலனுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்முருவுந் தாமேயாகி,
நெருநலையாய் இன்றாகி நாளையாகி
நிமிர் புன்சடையடிகள் நின்றவாறே"

என்று இறைவனின் தடத்த இலட்சணத்தைப் திருநாவுக்கரசர் புகட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனன்றி ஓர் அணுவும் அசையாது. ஆன்மாக்கள் ஈட்டிய பூர்வ புண்ணிய பாவங்களுக்கமைய அவரவர்கட்குத் தனு, கரண, புவன, போகங்களைக் கொடுத்து அவற்றைப் பொசிப்பிப்பவன் இறைவன். இக்கருத்தை,

"ஆட்டுகின்றாய் ஆடுகின்றாய்
ஆடலையுங் காண்கின்றாய்,
கூட்டுகின்றாய் கூடுகின்றாய்
கொள்கைபல – நாட்டுகின்றாய்,
ஞாலமெலாம் இவ்வகையே
நானறியேன் நின்னுடைய
சாலமெலாஞ் சோணா சலா."

என்று பாடியிருக்கிறார் புராணிகர் சோணாசல முதலியார்.

" ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே
அடக்குவித்தால் ஆரொருவா அடங்காதாரே,
ஓட்டுவித்தால் ஆரொருவர் ஓடாதாரே
உருகுவித்தால் ஆரொருவர் உருகாதாரே,
பாட்டுவித்தால் ஆரொருவர் பாடாதாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியாதாரே,
காட்டுவித்தால் ஆரொருவர் காணாதாரே
காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக்காலே!"

என்று திநாவுக்கரசு நாயனார், அவனருளாலே தான், அவன்தாள் வணங்கமுடியுமென்று விளம்புகிறார்.

ஆன்மா பெறுதற்கரிய மானிடயாக்கையைப் பெற்றும் அதனாலடையக்கூடிய நன்மைகளை அடையாமலும் உண்மையை உணராமலும் பாசபந்தங்களிற் சொக்கி நித்திய அநித்திய வஸ்து விவேகம் பெறாது பகுத்தறிவைப் பணயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துத் தீயவழிகளிற் செறிந்து புவிப்பொருளை ஈட்டி, அதையடைந்த செருக்கால் நான் என்ற அகங்காரமும் எனதென்று மமகாரமுங் குடிகொண்டு, மிகக் கேவலமான எண்ணங்களிலும் பேச்சுக்களிலும் செயல்களிலும் ஈடு பட்டு மிகவருந்தி, மீளாப் பிறப்பிறப்பென்னுஞ் சுழற்சிக்குள் அகப்பட்டு விடுதலையடையாது தவிர்க்கிறது.

மானிடயாக்கை நமக்குக் கிடைத்தது நம்மைப் பந்தித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களினின்றும் நீங்கி நித்தியமாகிய பேரின்ப வாழ்வைப் பெறுதற்கேயாகும். கடவுளை மனத்தினால் தியானித்தும், வாக்கினால் துதித்தும், காயத்தினால் வணங்கியும் இம் மலங்களை நாம் நீக்கிக்கொள்ளலாம்.

நாம் திடமான தெய்வ நம்பிக்கையுடன், தளராத குருபக்தியும் உடையர்களாய் சிவ, தர்ம, சங்கமங்களிற் கூடி உழைக்கவேண்டும். அங்கு நாம் நெறிபட்ட சற்குருவைத் தரிசித்து அவருதவியினால் இறைவனை அடையும் நேர்வழியைக் கண்டுகொள்ளலாம்.

மனமானது மிகவும் திருக்குடையது. அது கொப்பு விட்டுக் கொப்புத் தாவும் வனக் குரங்குக்கு ஒப்பாய் ஒன்றிலும் நிலைநில்லாது, பொல்லாப் புலன்கள் வழிச் சென்று, இன்ப துன்பங்களை நுகர்ந்து திரியும். அது தான் கெட்டதும் அல்லாமல்தன்னைச் சார்ந்த உயிரையும் உணர்வையுங் கெடுத்து இல்லற்றுப் (பொருந்தியிருக்கும் உடலை விட்டுப்) போகச் செய்கிறது. இதனை எமது தாயுமான சுவாமிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" காடுங் கரையும் மனக் குரங்கு
கால் விட்டோட அதன் பிறகே,
ஓடுந் தொழிலாற் பயனுளதோ
ஒன்றாய்ப் பலவாய் உயிர்குயிராய்,
ஆடுங் கருணைப் பரஞ்சோதி யருளைப்
பெறுதற்கன்பு நிலை,
தேடும் பருவமிது கண்டீர் சேர
வாருஞ் சகத்தீரே,"

என்று ஓலமிட்டுக் கூவியழைப்பதிலிருந்து உணரலாம்.

விதியென்பது முன்னொரு காலம் மனதில் எழுந்த எண்ணமேயாகும். எண்ணம் அருவநிலை. எண்ணத்திற்கியைந்த செய்கை நிகழுங்கால் அது (எண்ணம்) புலன்களால் உணரப்படும் பொருளாய் மாறும், பொருள் உருவநிலை. புவிப்பொருள்கள் யாவும் உண்மையில் மனவிரிவுகளேயாகும். உணர்ச்சி மனதிற்கு இன்பத்தையோ - துன்பத்தையோ நல்கும். இவ் இன்ப துன்பங்கள் யாவும் அநித்தியமானவை. நல்லறிவுடையோர் அவைகளுக்காக வருத்தமடையாமல் உலகத்தோடு ஒன்றி வாழ்பவார்கள். மேலுஞ் சாதாரண மக்களுக்குத் தீயஉணர்ச்சி அசுரத் தன்மையையும் நல்லுணர்ச்சி தெய்வத் தன்மையையும் உண்டாக்கும் இயல்புடையன.

தற்காலம் மனதில் எழும் எண்ணங்கள் யாவும் பிற்கால இன்ப துன்பங்களுக்குக் காரணமாய் அமையும். ஆகவே, மனமாகிய தோணியை, நல்லெண்ணமாகிய சுக்கானால் திருப்பி, வைராக்கியம் என்ற துடுப்பால் வலித்து, மோட்சக் கரையை அடையாதவன் எவனும் பிறவிக் கடலில் அழுந்த வேண்டியவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவிக் கடலும், தோணியும், சுக்கானும், துடுப்பும், மோக்கக் கரையும் தனக்குத் தான் தர வருபவைகளே! சகலதுந் தானான மாலுமியிற் தங்கியிருக்கிறது. நாம் நல்ல மாலுமிகளாயிருந்தால் நமக்கு முருகன் நல்ல திசையறி கருவியாய் இருப்பான். கருவியிலுள்ள காந்தக் கம்பி முருகனின் கை வேலாயுதம் போன்றது. அது எக் காலத்தும் எவ்விடத்தும் வடதிசையையே காட்டும். அதுபோலவே வேலும் வடதிசையிலுள்ள இமையத் திறைவனாம் சிவபரம்பொருளையே காட்டும். வேலெனுங் கோலை ஓச்சுதலே பிறவிப் பெருங்கடல் நீந்த – இறைவன் அடிசேர –பண்டு செய்த பழவினைகள் மாழ –பாழ்ந்த மனது நல்வழி போக – காலனை வெல்ல ஏற்ற மார்க்கமாகும்.

மேற்கூறிய வாய்மையையே, ஜீவரெட்சகராகிய ஏசுநாதர், "எவனொருவன் தன்னிடத்துள்ள சிலுவையைத் தூக்கிக்கொண்டு என் அடிச்சுவட்டைப் பின்பற்ற வில்லையோ அவன் பரலோக ராச்சியத்துக் காளாகமாட்டான்," என்றும்,

ஆண்டவனின் திருத்தூதராய் வந்தவதரித்த நபிகள்நாயகம் அவர்கள், " உன்னிடமிருந்து காணாமல் போன ஒட்டகத்தை எங்கிருந்தாலும் தேடிப்பிடி." என்றும் கூறி போந்தனர்.

மேலும் இதனையே ஆசிய ஜோதியாய் அவதரித்த சித்தார்த்தர் துறவு பூண்டபின். "சிந்தனைக்கெட்டா உயர் ஞானமாகிய மோன நிலையை", போதிமர நிழலில் ஆதிப் பிரானாய புத்தங்கச் சுவாமியாக– மாதவனாக வீற்றிருந்து தம் மாணவருக்குக் காட்டாமல் காட்டியருளினார் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு கூறப்பட்ட வேல், சிலுவை, காணாமல் போன ஒட்டகம், புத்தங்கச் சுவாமியாய் அமர்ந்திருந்து காட்டிய நிலை யாவும் ஒரே பொருளைக் குறிக்கும் பல வார்த்தைகளே என்று அறியவேண்டும். இதை நன்கு உணர்ந்த ஒருவன் அன்பும். அறனும், வெகுளாமையும் உடையவனாய், இல்லறத்தானாய் இருந்தாலும் வாய்மை யான துறவியேயாவான்.

ஐம்புலன் ஒடுங்கிய அறிவு நிலையில் மனம் ஒன்றிய முடிவே பேரின்பம், மோக்கம் அல்லது நிர்விகற்ப சமாதி எனப்படும். அதற்குரிய ஞானப்படிகளை குருபிரானால் அருளப்பெற்றுச் சாதனை செய்து பயனடைய வேண்டு மென்று அருளொளி அண்ணல் சித்ரமுத்தடிகள் கூறுகிறார்.

" மனம் விரிந்து குவிந்தது மாதவம்
மனம் விரிந்து குவிந்தது மன்னுயிர்
மனம் விரிந்து குவிந்தது வாயுவாம்
மனம் விரிந்து ரைமாண்டிட முத்தியே"
அகத்தியர் – திருமந்திரம் 8/4

இதைச், சமயத் தத்துவத்தை ஆய்பவர்கள் நன்கு உணர்வார்கள். உணர்ந்ததை உணராத மக்களுக்கு எடுத்து உணர்த்தி உலகில் நீதியையுஞ் சமாதானத் தையும் ஏக சகோதரத்துவத்தையும் நிலைநாட்டுவார்கள். அன்பும் அருளுங்குழைந்த ஏக சகோதரத்துவம் உலகில் நிலவும் காலத்தில் இம் மண்ணுலகம் பொன்னுலகமாய்ப் பிரகாசிக்கும் என்பது திண்ணம்.

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு அருளொளி நிலைய வெளியீடான"அருளொளி"ஒளி 1, சுடர் 2ல் பிரசுரமான கட்டுரை. 1968 – மே மாதம்.

# மெய்யிலே மெய்

சர்வ ஜீவ – சர்வ சமயத் தாண்டவ மூர்த்தியாகி ஆண்டவனைத் திருவருள் பெற்ற அறிஞர்கள் எட்டுக் கொண்டான் என்பார்கள். இவ் எட்டுக் கொண்டானை தில்லை வெளியில்– சிதம்பரத்தில் தூலத்ததோடு சோதியிற் சோதியாய் இரண்டறக் கலந்த மாணிக்கவாசகன்

" நிலம் நீர் நெருப்பு உயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்,
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்.
உலகேழெனத் திசை பத்தெனத் தான் ஒருவனே
பலவாகி நின்றவாதோணோக்கம் ஆடோமோ,"

என்று திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

இவ் எட்டுக் கொண்டான்தனைத் தொட்டுக்கொண்டானை – அவனே தானானவன் என்று சொல்வதில் தப்பென்ன? இவனே ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் நீங்கப் பெற்று, நிர்மலனாகி வீடுபேறு அடைந்து, நித்திய வாழ்வு பெற்றவனாவன். இவனையே மானிடயாக்கை தாங்கிவந்த நெறிபட்ட சற்குரு, சீவசிவன் அல்லது நடமாடும் தெய்வம் எனலாம். இவனில் தேயு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தியாகிய – தீ சொரூபமாகிய – அண்ணாமலை எனும் ஒரு செம்பொருள் மறைந்திருக்கிறது.

இந்த மறையாகிய செம்பொருள் உலக இன்ப துன்பங்களை வெறுத்துப் பேரின்ப வீடு அடைய விரும்பும் புண்ணிய சீலர்களுக்கு விசும்பித்துக் காட்சியளித்துத் தன்னைப் போலாக்கும் ஆற்றல் உடையது. இவர்களே தமிழ் உலகம் போற்றும், "அண்டத்திலும் பிண்டத்திலும் ஆண்டவனைக் காணும் தொண்டர்கள்". ஏனையோர் இடத்திலும் இவ்வுண்மை மறைந்துகிடக்கிறது. ஆனால் இவர்கள் தெய்வலோக வீட்டின் சாவியை இழந்தவர்கள்.

பரலோகராச்சியம் பாவிகள் புகாதபடி தாளிடப் பட்டிருக்கிறது. "தேடு கண்டடை வாய், கதவைத் தட்டு திறக்கப்படும், கேள் கொடுக்கப்படும்," என்று ஜீவரட்சகராம் யேசுநாதர் கூறிப்போந்தார். அவர் போதனைகளைப் பின்பற்றிய மக்கள் எங்கு தேடுவது, எப்படித்தட்டுவது, யாரிடம் கேட்பது என்று தெரியாமல் மலைக்கிறார்கள். மேலும், அவர் மக்கள் ஏமாற்றம் அடையாது இருத்தற் பொருட்டு "பரலோக ராச்சியம் உங்களுக்கு உள்ளேயே இருக்கிறது. அதன் சாவி பீற்றர் கையில் கொடுக்கப்பட்டு இருக்கிறது" என்றும் கூறியுள்ளார்.

நபிகள் நாயகம் அவர்கள் மெக்கா நகரில் தமக்கு ஏற்பட்ட அல்லல்களைத் தவிர்த்தற்பொருட்டு சில நண்பர்களோடு மேதீனா நகருக்குப் போனார்களென்றும், அங்கு தான் முன்னொருகாலம் தனது ஒட்டகம் கட்டிய இடத்தில் தொழுகைக்கு வேண்டிய பள்ளிவாசலை நிறுவி, பின் தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளை பின்பற்றியவர்களுக்கு " உங்களிடமிருந்து காணமற்போன ஒட்டகத்தை அது சீன தேசத்தில் இருந்தாலும் தேடிக் கண்டுபிடியுங்கள்" என்று கூறிப் போந்தார். இதன் கருத்து தன்னை அறியும் அறிவைத்தான் இருக்கும் இடத்தில் கற்றுக் கொள்ள முடியாதெனில் சீன தேசத்தில் கற்றுக்கொள்ள முடியுமானால் அங்கு சென்றாவது கற்றுக்கொள்ளுங்கள் என்பதாகும். மேலும் அவர் "உலகத்தைப் படைத்தது மனிதற்காக, மனிதனைப் படைத்தது தன்னைத் தொழ" என்றுந் திருவாய் மலர்தருளியுள்ளார்.

இதையே தூலத்தோடு கைலாயபதியை அடைந்து ஒன்றிய ஞானப்பாட்டி ஒளவையார், நூல்களை வாசிப்பதினால் ஏற்பட்ட பிரயோசனமானது தனக்குள் இருக்கும் ஓங்காரத்தை அறிவதாகும் என்றும், சரீரத்தைப் பெற்றது சரீரத்துக்குள் கடவுளைப் பார்ப்பதற்கேயாகும் என்றும் கருத்துப்பட,

" ஆதியாய் நின்ற அறிவு முதலெழுத்
ஓதிய நூலின் பயன்," என்றும்

" உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்,"

என்றும் அறியாமையோடுகூடிய மக்களுக்கு அறிவுறுத்தி இருக்கிறார்.

மேலே கூறியவைகளைக் காய்தல், உவத்தல் இன்றி உற்று நோக்குவோமாயின் ஒரே பொருளைப் பல விதமாகப் பகர்ந்திருக்கிறார்கள் என்று நன்கு அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதபுத்திக்குரிய நாமரூபங்கள் அழிந்தாலொழிய ஆதி நாத ஒலி கேட்கமாட்டாது. ஆதி நாத ஒலியைக் கேட்க விரும்புவோர் பாசாபிமானம், மதாபிமானம் முதலிய வற்றை அறவே ஒழித்து சனசமூகத்தை ஒன்றுபோல் நேசித்து ஒரு வரையும் வஞ்சியாமலும் இம்சியாமலும் இருக்கவேண்டும். மனதில் இத்தகைய பேதபுத்தி அற்ற வனுக்கு முன் இரண்டாம் பந்தியில் கூறியதற்கு அமைய நெறிபட்ட சற்குருநாதன் தோற்றி நடுவுநிலை பெற்ற நாகைநாதனின் ஒளி சொரூபத்தைக் காட்டி அதில் ஒன்றி ஏகம் ஆகும் மெய்ஞ்ஞானத்தை உபதேசித்து அருளுவான்.

உபதேசம் பெற்ற உத்தமன் கடவுளைக் காணக் கன்மம் தொலையாத கசடனைப்போலக் காடுமலைகள் என்று தேடி அலையத் தேவையில்லை. இருந்த இடத்தில் தன்னில் தானே உள்ளொளி பெற்றுப் பேரின்பத்தில் சொக்கி, உலகில் தனக்கும் பிறருக்கும் பேதங்காட்டாமல் ஓடும் புளியம்பழமும் போல அருந்தல், பொருந்தல், பிரிதல் முதலியவைகளில் மயக்கம் அடை யாது நிறை முறையான இல்லற ஒழுக்கத்தைப் பேணி இருப்பான். இத்தகைய இல்லறத்தானோடு சுகிக்கும் இல்லாளும், வாசுகி அம்மையைப் போல் ஈற்றில் இறையிற் கலப்பது சத்தியம். இல்லாளுக்கு இறைவன் அவ்வில்லானே. மனைவி கணவனுக்குச் செய்யும் பணிகளே அவள் கடவுளுக்குச் செய்யும் பூசைகளாகும். மேலும், இவ் இல்லற மாதவன் இறைவனுடைய மாதாக மாறி அவனுக்குப் பணி செய்துகிடப்பதே அவனுடைய பூசையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகமுஞ் சொர்க்கமும் இவ் இல்லகத்திலேயே. இருக்கின்றன. இல்லாளுக்கும் இறைவனுக்கும் இடையே வாழும் புருஷன் இல்லாளோடு இணைந்து சிற்றின்பத்தையும் இறைவனோடு இணைந்து பேரின்பத் தையும் அடைவான்.

மேலும் எவன் ஒருவன் ஒலியை எழுப்பும் நாதனை (நாவை) ஒளியை எழுப்பும் விளக்காய் மாற்றி அந்த வொளியை அலையா மனத்தால் உற்று நோக்குவானோ, அவன் தான் வழிபட்டுவந்த தெய்வத்தை அங்கு காண்பான். தெய்வதரிசனைக்கு வழிகாட்டுதலே சற்குருநாதரின் ஞான தீக்கையாகும். இத்தகைய தீக்கையரை (தீயை உடைய கையரை) கிட்டிச் சேருதல் இலகுவான கருமமா? அதிதீவிர பக்குவியாய் இருந்து, சிதம்பர தரிசனம் செய்ய விரும்பிய ஆதனூர்ப் பறையனாகிய நந்தன், தனது மீறிய வைராக்கியத்தால் தன் சாதி (சாதனைகளால் ஏற்பட்ட)க் குற்றம் போக்க அக்கினி ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டான் என்றால், எச்சமயத் தவரும் தத்தம் சாதிக் குற்றம் போக்க அவ் அக்கினி ஞானஸ்நானம் செய்விக்கப் படத்தானே வேண்டும்? இலௌகிகத்தில் லயப்பட்டு பரம்பரையான போலிப் பாமர வணக்கத்தை கொண்டாடுவோர் இந்நெருப்பை அணுக முடியுமா? அணுகினால் அவன் பாவதோஷங்கள் எல்லாம் பஸ்பம் ஆகாதா? நெருப்பைப் புழுபற்றுமா? இவை சிந்தனைக்குரியவை.

பாவத்தை நாசம் செய்யும் இவ் அக்கினி காளி கோட்டத்துக் கழுமரம் போலவும், நபிநாயகம் (முகமது நபி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட பொன்மலை போலவும் இயேசு நாதன் அறைபட்ட சிலுவை போலவும் காலனைக்காயும் அண்ணாமலைத் தீபம் போலவும் மிளிர்ந்து ஆகாயத்தை நோக்கி எழும்பக் காமத்தை நாசஞ் செய்யும் அககினி ஒன்று ஆகாயத்தி லிருந்து இவ் அக்கினிக்கு நேராக இறங்குகின்றது. இவ் அக்கினிகள் இரண்டும் சந்தித்த இடமே சிவம், சக்தி பின்னமிலா நிலையாகும்– ஜீவபிரம ஜக்கிய நிலையாகும் கந்தனைப் பெற்று முகர்ந்த நிலையாகும்–கல்லறையில் இருந்து எழுந்து விண்ணேறித் தேவனின் பக்கலுற்ற இயேசுநாதரின் நிலையாகும் அல்லது சமய கோடிகள் போற்றும் அனந்த நாம ரூபங்களுக்கியைந்த உண்மைப் பொருளாகும். இவ் உண்மை நிலையை உணர்ந்தவன் வேறும் அநேக சமயங்களைச் செய்து விடலாம். எல்லாச் சமயங்களுக்கும் இங்கு கூறியவை மூலகாரணப் பொருள் களாய் இருப்பதால் சமய தூஷணை மீளாத நரகத் திற்கே வழி காட்டும் என்று உணரவேண்டும். மேலும், இவ் அக்கினி ஓட்டங்களில் இறங்கும் சக்தி வாய்ந்தோர் யாபேரும் இறைவனின் தமர்களே–சந்ததியினரே ஆவர்.

கடவுள் ஒருவருக்கும் பிதாவுமல்ல ஒருவருக்கும் பிள்ளையுமல்ல, பிதாவும் பிள்ளையும் என்ற நிலைகள் யாவும் தான்ஆன தன்மையேயாகும். இதையே மனிதர்கள் மகான்களாய் மாற்றிப் பிறந்தநிலை என்று இந்து சமயிகள் கூறுகின்றனர். மாற்றிப் பிறந்தவர்கள் மீண்டும் கருப்பத்தூறிப் பிறக்கவோ அல்லது ஈறக்கவோ மாட்டார்கள். என்பது அவர்கள் கருத்து. ஆன்றோரின் பாகுபாடுகள் எல்லாம் பரமபதியை அடையும் மார்க்கங் களேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுடம்பிற்கு ஆன்றோர் மெய் என்று நாமம் சூட்டி யிருக்கிறார்கள். நாம் பொருந்தியிருக்கும் மெய் பொய்யாகப் போகுமுன் இம் மெய்யினில் மெய்யாகவிருக்கும் - உத்தமனாயிருக்கும் - ஆன்மாவாயிருக்கும் - ஆண்டவ னாயிருக்கும் அல்லது ஞானசொருபமாக இருக்கும் பாக்கியத்தை அடைதலே வாழ்கையின் பயனாகும்.

" உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திடம்பெற மெய்ஞானம் சேரவும்மாட்டார்"

என்ற திருமூலர் வாக்கை உற்று நோக்குவோமாக. மேலும் இப்பெரியார் மனித வர்க்கத்தின் முன்னேற்றங் கருதி,

தன்மேனி தற் சிவலிங்கமாய் நின்றிடும்
தன்மேனி தானுஞ் சதாசிவமாய் நிற்கும்
தன்மேனி தற்சிவன் தற்சிவானந்தமாந்
தன்மேனி தானாகுந் தற்பரன் தானே!

என்று கூறியுள்ளார்.

இம் மெய் நெறியையே உலகிற் பிரியாப் பெரு நெறியென்றும் இறவாத இன்ப அன்பு நெறியென்றும் பிறிதோர் இடத்தில்:-

பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார் அம்மன்றிற் பிரியாப் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே.

என்றும் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மெய்நெறியை அறிந்து செறிந்து அடங்கினவன் அருகன்–அருகக்கடவுள் ஆவன். அவனே பெரியவன். இம் மெய்ஞ்ஞான இரகசியங்களை சாதனையில் காணாத வர்கள் பிறர் அறியச் சொல்வது தோஷமாகும். கூடிய வரை சாதனையில் போடவே தெண்டிக்க வேண்டும். மெய் ஊக்கம் நற்பயன் அளிப்பதாகும்.

"உருவம் அழியமுன் சற்குருவை அறிந்துணர்"

என்ற

தவத்திரு சித்திரமுத்தடிகளாரின் வாக்கும் மேற்கூறியதை வற்புறுத்துகிறது.

மக்களிற் பலர் முத்தி–நிர்வாணம் அல்லது பேரின்பம் என்பது உடலை நீங்கிய பின் அடைகிறவோர் பதவி என்று எண்ணுகிறார்கள். இது இந்து சமயக் கொள்கைகளுக்கு முழுவதும் விரோதமானதே. இங்கு குறிப்பிட்ட திருமந்திரப் பாக்களும் இந்நிலையை நன்கு விளக்குகிறது. வேண்டிய காலம் பூமியில் வாழ்ந்து அதை வெறுத்த காலம் ஆண்டவனில் கரத்தலே அதுவாகும்.

சுபம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு அருளொளி நிலைய
வெளியீடான "அருளொளி" ஒளி 1,
சுடர் 3ல் பிரசுரமான கட்டுரை.
1968 – செப்டெம்பர் மாதம்.

# மெய்யிலே தெய்வம்

"என்னை நீவேறாய் எண்ணி இடர்ப்படவேண்டா மென்று தன்னைத் தந்தாண்டுகொண்ட சற்குரு தாள்கள் வாழ்க."

ஆத்மாசாந்தி நிலையமும், அருளொளி வழிபாடும், ஆசான் அருளும் அடியாருறவும் இன்று போலென்றும் பொன்றாப் புகழுடன் திகழ்வதாக! மேலும், விழாவில் பங்குபற்றுஞ் சகோதர சகோதரிகள் யாபேரும் துன்பம் நீங்கி இன்பம் பொங்கிச் சகலசுகுணங்களோடுங் கூடிநீடு வாழ்வீர்களாக! இவையே அடியேனின் வேண்டுதல்.

நீடு வாழ்வதால் எவரும் தாந் தாம் செய்த தீவினைகளுக்கு மன்னிப்பையும் நல்வினைகளுக்குச் சன்மானத்தையும் பெற்றுக் கொள்வார்கள்.

அன்பர்களே! "கேளுங்கள் கொடுக்கப்படும்" என்பது ஜீவரெட்சகராம் யேசுநாதரின் பொய்யா மொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் உங்கள் முன்னிலையில் வாசிப்பதற்காக வரைந்தவைகளையும் கேளுங்கள். கேட்டவைகளை சிந்தித்துப்பாருங்கள். சிந்தித்துத் தெளிவடையுங்கள். பயனுறுவீர்கள்.

அன்றும், இன்றும், என்றும் உள்ள ஒண் பொருள் ஆன்மா ஒன்றே ! ஆன்மாவே பாசமற்ற நிலையில் பதி – சிவனாயும் – அந்தராத்மாவாயும், பாசமுற்ற நிலையில் பசு–சீவனாயும் இருக்கின்றது.

ஆன்மாவே சகல சீவராசிகளும், ஆன்மாவே உற்றாரும், பெற்றாரும், மற்றோரும். உண்மையைக் கூறுமிடத்து ஆன்மாவுக்கு அந்நியமாய் ஒன்றுமில்லை. சாதி, சமயம், மதம் என்ற பேதங்கள் யாவும் தம்முள் தாமாயிருக்கும் அந்தராத்மாவை யுணராத – பொய்யுறவோடு கூடிய–பந்தபாசங்களுக்குட்பட்ட புல்லறிவாளர்களால் வகுக்கப்பட்டன. இதுபற்றியே,

" அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி,
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி,"

என்றதே தியானமாயிருந்தது, அதுவே தானான அருட் திரு இராமலிங்கவள்ளல் அவர்கள் "சாதியும், மதமும், சமயமும் பொய்," என்று வரையறை கூறி வைத்தார்கள்.

இதையே தில்லைச் சிதம்பரத்தில் ஜோதியில் ஜோதியாய்க் கரந்து மறைந்த மாணிக்கவாசக சுவாமிகள், "சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு, பேதை குணம் பிறருருவம் யானென தென்னுரைமாய்த்துக் கோதிலமுதானானைக் குலவு தில்லை கண்டேனே" என்று திருவாய் மலர்ந்தருளயுள்ளார்.

கல்வி கேள்விகளிற் சிறந்த இக்காலத்திலுமா இப்போலிப் பிரிவினைகள் தலைகாட்ட வேண்டும்? இவை மனிதகுலத்துக்கு ஏற்பட்ட பெருஞ் சாபம் – முற் காலங்களில் ஈட்டிய தீவினைகளின் பிரதிபலிப்பு அறியாமையால் அநுசரித்து வந்த தீய பழக்க வழக்கங்களின் பெறுபேறு என்று பலதையுங் கூறிக் கொண்டே போகலாம். இப்போலிப் பிரிவினைகளை அகற்றித் தாந்தாம் பழகிய தீயபழக்கங்களைத் தவிர்க்கப் பழகாதுபோகில் உலகில் அவர்கள் எவ்வண்ணஞ் சஞ்சல மற்ற வாழ்வும், சமாதானமும், ஆத்மா சாந்தியும் அடையப் போகிறார்கள்?

நான், நீ என்ற பேதபுத்தியற்றுத் தன்னிற் சகலத்யைும் தன்னைச் சகலதிலும் காண்பவனே ஞானியாவான். ஞானியே மானிடயாக்கை தாங்கி வந்த ஜீவரெட்சகன் –தெய்வலோக வழி காட்டி அல்லது நடமாடும் தெய்வமெனலாம். அத்தகைய தெய்வ மனிதனாய் எமது ஞானத்தந்தை சித்திர முத்தடிகள் விளங்குகிறார். அவர் உங்கள் பிறவிப்பிணிக்கு நல்ல மருந்து. அவரை நம்பி, அவரின் வார்த்தைகளைக் கேட்டு, அவரின் கொள்கைகளைப் பின்பற்றி, பொய், களவு, கோபம், பொறாமை, புறங்கூறல் முதலிய குற்றங்களை நீக்கிச்சோதி வழிபாடு செய்கிறவர்கள் முத்தியின்பம் பெறுவார்கள். சந்தேகமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானிடயாக்கை எடுத்துஞ் சிவத்தை வணங்க வறியாது மாண்டுபோவதால் என்ன பயன்?

" பொய்யனைத்தையும் விட்டவர் புந்தியுள்,
மெய்யனைச் சுடர் வெண்மழுவேந்திய,
கையனைக் கச்சி யேகம்பம் மேவிய,
ஐயனைத் தொழுவார்க் கில்லை யல்லலே".
என்றார் அப்பர் சுவாமிகள்.

நீங்கள் இன்றே இப்பொழுதே மேற்கூறப்பட்ட பொய்களை வேரோடு கழைந்து உங்கள் புத்திகளில்,

" மெய்யனைச் சுடர் வெண்மழுவேந்திய
கையனைக் கச்சியேகம்பமேவிய ஐயனை"

குருநாதனின் திருவருள் பெற்று அவரின் பார்வையாலும் பாசததாலும் உணர்த்தப்பட்டு உணர்ந்து வணங்கி அல்லல் தீர்ந்து ஆனந்தம் உறுங்கள்.

" பேணுவாம் உருவைக் குருவினைத்தேட
தேடுவாங்குருவை அருளினைக் கூட
கூடுவாம் அருளைப் பதியினைப் பணிய
பணிவாம் பதியைப் பவநோய் போக்கவே"

" குற்றமிலனாய்க் குடி செய்து வாழ்வானைச்
சுற்றமாய்ச் சுறறுமுலகு." – தேவர் குறள்.

" மாசற்ற கொள்கை மனத்திலடைந்தக்கால்
ஈசனைக் காட்டுமுடம்பு." – ஔவை குறள்.

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு அருளொளி நிலைய
வெளியீடான"அருளொளி"மலரில்,
பிரசுரமான கட்டுரை.
1967 – நவம்பர் மாதம்.

# காலனை வெல்லலாம்

விரிந்த ஆகாயமே ஓங்காரப் பிரணவம். அதனுள் விண்ணோர்க்கு மெட்டா வெளியை வீடாகக் கொண்டு, பேரொளி (த்திருமேனி) யாய் விளங்குபவன் இறைவன். இச்சோதி சொரூபன் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் வியாபித்திருக்கிறான். இவனை இந்துக்கள் சிவன், விஷ்ணு அல்லது பரப்பிரமம் என்றும், பௌத்தர்கள் ஞானம் என்றும் கிறீஸ்தவர்கள் ஏகோவா என்றும், இஸ்லாமியர் அல்லாஹ் என்றும் பல்வேறு நாமங்களால் போற்றி வணங்குகிறார்கள். இம்மூலப் பொருளாம் தத்துவனை அறிவதோ பிறப்பறுக்க, காலனை வெல்ல நன்மார்க்கமாகும். சிவனைப் பற்றிய மார்க்கண்டேயனும், முருகனைப் பற்றிய அருணகிரி நாதனும், யமனை வென்றமை எங்ஙனம்?

அநாதியில் மலத்தோடு கூடிய ஆன்மாக்கள் தாந்தாம் ஈட்டிய புண்ணிய பாவங்களுக் கீடாக இறை யருளால் பற்பல பிறவிகள் எடுக்கின்றன. அவற்றுள் மானிடப் பிறவியே மேலானது. மானிடர்களே இகபர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பங்களைத் துய்க்கும் அருகதையுடையவர்கள். இவர்களிற் தெய்வ விசுவாசமுடையவர்களாய் ஆன்றோர் வகுத்த விதிமுறைகளை அனுசரித்து, நெறியோ டொழுகும் நிலை பெற்றவர்களே வாய்மையான சிவ தொண்டர்கள் ஆவார்கள். இவர்கள் நெறிபட்ட வாழ்வு வாழ்ந்து மெஞ்ஞானமாம் மரணமற்ற நித்தியவாழ்வெய்தி, பேரொளியிற் கலந்து இன்புறுவார்கள். அதற்குறு துணையாம் தமதுடலைக் கண்ணேபோல் போற்றிக் காத்துவருவார்கள்.

எமதுடல் ஒரு சிறு உலகம். விண்ணிலும் மண்ணிலு முள்ள சகல அசைவுள்ளனவும் அசைவற்றனவு மாகிய இயற்கைப் பொருட்களும், மூவர் தேவர், முனிவர்களும் இந்த மெய்யுலகத்தின் கண் அமைந்திக்கின்ற உண்மையை ஆன்றோர் அறிந்திருந்தனர். அவர்கள் தமது உடல்களில் உத்தமனைக் கண்டனர். அதனாலேயே ஔவையார்,

" உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்".

என்று உடம்பின் முக்கியத்துவத்தையும் அதனைப் பெற்றதன் பயனையும் விளக்குகிறார். திருமூலநாயனாரும் இதனைப் பின்வரும் செய்யுள்களில் தெற்றெனப் புகட்டியிருக்கிறார்.

" உடம்பார் அழியில் உயிரால் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளேஉத்தமன் கோவில் கொண்டானென
உடம்பினை யானிருந் தோம்புகின்றேனே."

உடம்பின்றி உயிரும், உயிரின்றி உணர்வும், உணர்வின்றி அறிவும், அறிவின்றி ஆன்மபோதமும், ஆன்மபோதமின்றி மெய்ஞானத் தோற்றமும், மெய்ஞ் ஞானத் தோற்றமின்றி மெஞ்ஞானச் சித்தியும், மெஞ்ஞானச் சித்தியின்றி ஆனந்தமாம் பரகதியும், இறவாப்பிறவாப் பெரு நிலையும் இல்லை என்பது இவ் ஆன்றோர் துணிபு.

ஒளவையார் தமதுடலை ஆதாரமாகக் கொண்ட ஆன்மபோதத்தை – கலைமகள் பீட மென்றழைகப்படும் நாவாம் ஆத்தியைச் சூடி, ஏத்தியேத்தி தொழுதமையின் விநாயகப் பெருமான் அவரிடத்துக் கருணைபாலித்து தம் பெருந் தொந்தியாம் ஓங்காரத்து உள்வெளியாகிய நிராதாரத்தில் சேர்த்துக்கொண்டார். இவ்வாறு ஒளவையார் அடைந்த புகலிட்த்தை நாமும் அடையவேண்டில், நாமும் அவர் விதந்தோதிய முறையே செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட புகலிடத்தையே இந்துக்க்ள கைலாயம், வைகுந்தம், காசி, கன்னியாகுமரி, தெய்வலோகம் என்று கொள்வர். இவ்விடத்தே உற்ற ஆன்மபோதமே, இந்துக்கள் வணங்கும் ஆதியாம் சிவ லிங்கமும், வேலாகிய ஞானவாளேந்தும் முருகனுமாக அமைகிறது. அதிற் தோன்றும் சிவஞானத்தை சூரிய கலையாகவும். சிஞானசித்தியைச் சந்திரகலையாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையிரண்டின் கலப்பாலாய சிவப்பிரகாசத்தை அக்கினி கலையாகவும் கொண்டு இங்கு காணும் ஞானபோதமே அருட்பெரும் ஜோதியாகவும் கொளவர் மெய்யுணர்ந்தோர். அதையுணர்ந்து அடைதலே முத்தி, சமாதி, நிர்வாணம் எனப் படுவன. மரணத்தை வெல்லும் மார்க்கமும் இதுவே.

இவ்வாறு முத்தி நிலையடைதற்கு விநாயகப் பெருமானின் திருவருள் இருத்தல் வேண்டும். இவர் பரவெளியாம் வானவீட்டைப் பொருந்தி, அவ்வீடுற்ற பூதகணங்களுக்குத் தலைவனாக – பூதநாயகனாக விளங்குகிறார். வானவீட்டின் வாயிலாகவும், வாயிற் காப்போனாகவும் அமைகிறார். இப்பெருமானின் அனுமதி இன்றி எவரும் – எப்பூதரும் வானவீட்டினுள் புகமுடியாது –முத்தியாம் வீடுபேறுங்கிட்டாது. இதனை உணர்ந்தமை யினாலேயே சித்தர்களும், முத்தர்களும் மற்றும் பக்தர் களும் கணபதியெனும் களிற்றுமாமுகனைக் காப்பாகக் கொண்டு போற்றிப் பரகதியடைந்தனர்.

சைவப் புலவர்கள் யாவரும் தாம் ஆக்கும் பாமாலைகள் யாவும் இனிது முடிவுறப் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரனை முதற்துணையாகக் கொண்டு காப்புப் பாடித் தம் நூல்களை யாத்தனர். மூலமுதலாய் விளங்கி வல்வினை தீர்த்து உறுதுணை யாக நிற்கும் பெருமானை கபில தேவநாயனார்,

" விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்–விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினாற்
கண்ணிற் பிணிமின் கனிந்து."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையருளை நாடி நெறியோடு ஒழுகி வருபவரை இறைவன் தன்னிலைமை பெறச்செய்யச் சித்தங்கொள்கிறார். இதனை உமாபதி சிவாச்சாரியார் திருவருட்பயன் வாயிலாக,

" தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ்சத்தி
பின்ன மிலான் எங்கள் பிரான்."

என்றும், இறைவன் அவரவர் பக்குவத்திற்கேற்ப குருவடிவாய் அருள் புரிகிறார் என்பதை

" அறியாமை யுண்ணின் றளித்ததே காணுங்
குறியாகி நீங்காத கோ."

என்றும் விளக்குகிறார். ஆண்டவன் பக்குவமடைந்த ஆன்மாக்களைத் தன்னிலை சாரச் செய்வதற்கு விநாயகன், முருகன் போலும் கோலந் தாங்கி வந்து பாசபங்கஞ் செய்கிறார். ஆன்மதத்துவத்தை உணர்த்தி தம்மிடத்திற்கு நேர்வழி காட்டி அருமறையின் பொருளை விளக்குகிறார். அப்போ அவன் அதுவாகின்றான்.

" நெறிபட்ட சற்குரு நேர்வழி காட்டின்
பிரிவற்றிருக்குஞ் சிவம்."

என்ற குறள்வாயிலாக இவ்வுண்மையை ஔவையார், உலகிற்கு எடுத்துரைத் துள்ளார்.

முருகப்பெருமானைத் தன் குருவாகக்கொண்டு பேரின்பவீடடைந்த அருணகிரி, குருவாய் வருபவரின் இலக்கணத்தைக் கந்தரலங்காரம் வாயிலாக விளக்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" பெரியோரெனினும் புலையோரெனினும்
சிறியோரெனினும் தெளிவோரவரே
குறியோரெனினும் குருவாய்வருவான்
நெறியோடொழுகும் நிலைபெற்றிடினே."

இஞ்ஞான்று என்குருவாய் அருமறையின் பொருளுணர்ந்து, தன்னுள் தானான தன்மையனாய்ச் சென்ற விடமெல்லாம் அருள்மழை பொழிந்து இருள் அகற்றி ஒளி பரப்பிவரும் அருட்திரு சித்ரமுத்தடிகள்,

**" மூலப் பொருளறி காலனை வெல்லலாம்."**

என விரிந்த தத்துவத்தைக் குறுக்கி எளிதில் விளங்கும் நடையில் கூறி இருக்கிறார்கள்.

இதே கருத்தை யாழ்நகர் தந்த யோக சுவாமிகள், "கந்தனுக்கு முன் பிறந்த கணபதியைக் கைதொழுதால் காலனையும் வென்று கடைத்தேறலாம்."

என்று அழகுற மொழிந்திருக்கிறார்.

" ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப் பறையறைமின்
மானமா ஏறும் ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆன நீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம் நாம் மாயப்படைவாராமே."

என்று மணிவாசகப் பெருமான். மாயப்படைகளாம் மாயைகளும் அதனால் வரும் மரணமும் வராது வானவூர் கொள்ளலாம் என்று கூறி, அதற்கு "ஞானவாள் ஏந்து" என்று வழியும் கூறுகிறார். நாமும் அவ்வாறு எம்மிடத்தே உள்ள ஞானவாட்களை ஏந்திக் காலனை வென்று கடைத்தேறுவோமாக !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு அருளொளி நிலைய வெளியீடான "அருளொளி" ஒளி 1, சுடர் 3ல் பிரசுரமான கட்டுரை. 1968 – செப்டெம்பர் மாதம்.

# யோகமும் ஞானமும்

யோகமெனப்து சித்த விருத்திகளை நிரோதித்தல், தடுத்தல், ஒன்றுசேர்த்தல், தியானம் செய்தல் என்று பொருள் படும். இது பிரமாணம், விகற்பம், நித்திரை, சுருதி விபரியயம் என்னும் ஐந்து விருத்திகளையும் தடுத்து நிறுத்தும். சித்தம் நிர்விஷய தன்யமாத்திரமாக நிலைக்கச் செய்யும்.

யோகம் பல வகைப்படும். அவையாவன அட்டாங்க யோகம் பரியங்கி யோகம், கேசரி யோகம், மந்திர யோகம், பாவ யோகம், மாயோகம், பாசுபத யோகம், கரும யோகம், பக்தி யோகம், இராச யோகம், ஞான யோகம், சாங்கிய யோகம், தியான யோகம், சந்திர யோகம், சூரிய யோகம், எனப்படும். அட்டாங்க யோகத்தின் மூன்றாவது அங்கம் தான் ஆசனப் பயிற்சி. யோகத்தின பிரிவுகள் பலவாயினும், அவற்றுள் சுவாச யோகமும், இராஜ யோகமுந்தான் பிரதான பங்கு எடுத்துக்கொள்கின்றன.

சுவாச யோகமானது தனது இஷ்டப்படி மனதை வசப்படுத்திக் கொள்ள தூல தேகத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்ப சாதனைகளாலும், இரேசக, பூரக, கும்பகம் முதலியவற்றாலும் பலவந்தமாய் பழக்குதல். இராஜ யோகமானது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அந்தக் கரணங்களையும், தூல தேகத்தையும் அடிமையாக்கி ஆன்மாவின் பிரியப்படி நடாத்துதல், சுருக்கமாகச் சொன்னால் சுவாச யோகம் வாயுவை நிரோதித்தல். இராஜயோகம் சித்தத்தை நிரோதித்தல் எனலாம்.

ஆன்ம முதிர்ச்சிக்கு அதன் இஷ்டப்படி அந்தக் கரணங்களை வழிப்படுத்துவதே யோகத்தில் முக்கிய மானது. தீர்க்கமானதுமான மேலான நோக்கம். அதனை அடைவதற்கு எனப் பயிலும் பல தரப்பட்ட முறைகளே கட யோகம், தியான யோகம், சுவாச யோகம், மந்திர யோகம் முதலியன.

"உடலும், உயிரும், பூரணமும் ஒன்றே தெய்வம்" என்பது அகத்தியர் ஞானம். இதிலிருந்து பரவான்மா வானது உடல், உயிர், பூரணமாகிய மெய்யறிவு மூன்றும் சேர்ந்தது என்பது தெளிகிறது. ஆத்மா முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் அடைய, உடலும் உயிரும் அறிவும் உரம் பெறுவது முக்கியம். உடல் உரம்பெற கட யோகம் (யோகாசனம்) அவசிமாகிறது. உயிர் உரம்பெற சுவாச யோகம் (பிராணாயாமம்) அவசியமாகிறது. அறிவு முதிர தியானம் அவசியமாகிறது. இவற்றின் முடிவே கேசரி யோகம். இது ஒருமை நிலையையும் ஏகாக்கிர நிலை யையும் உணர்த்தி சிவப்பிரகாச நிலையை உண்டு பண்ணுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராணாயாமம் என்பது பிராணனை அடக்குதல் – வசப்படுத்துதல் எனப் பொருள்படும். உயிரின் ஆற்றலாகிய பிராணனை அடக்குகையில் சகல எண்ணங்களுக்கும், செய்கைகளுக்கும் மூலகாரணமான மனதை அடக்கியவனாகிறான். பிராணாயாமத்தை செய்தவனே பிராணநாதன்.

சிலர் நூல்களையும், தகுதியற்ற ஆசானையும் பின்பற்றி வாயுவை பூரக, கும்பக ரேசகஞ் செய்வது மட்டுமே பிராணாயாமம் என்று தெளிந்து பயில்கிறாகள். இதனால் காது செவிடாகியும், கண்வலி, தலைவலி, மூலக்கடுப்பு, மூலம்தள்ளல், மார்புவலி, பீசம்வீங்கல், முதலிய நோய்களுக்கு ஆளாகிறார்கள்.

எம்மவருள் பலர் தம் சரீரத்தில் உள்ள ஒன்பது வாயில்களை மட்டிலுமே அறிந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் மேலான மேல்வாயிலை ஒரு சில ஞானிகளே அறிந்துள்ளனர். அவர்களே உண்மையான பிராணாயாமம் பயின்ற பிராண நாதர்களாவார்கள்.

அப்படியானால் அப்பத்தாவது வாயில் எது? அதுதான் ஊசிமுனை வாயில் போன்ற சுழிமுனை வாயில். இதனை குருவருளால் தான் திறந்து கொள்ள முடியும். இவ்வழியாக நாம் நமது பிராணனைச் செலுத்தி நாலாம் படியாகிய துரிய பூமியின் வழியாக முப்பாழையும் தாண்டிய துரியாதீத மேல் வெளியில் திருவிளையாடல் புரிந்தால் எமனுடைய எல்லையைத் தாண்டி நித்தியப் பெருவாழ்வு வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலையைத் தக்க குரு மூலம் அறிந்து, அடைந்தவர்களுக்கு இறப்பு பிறப்பு இல்லை. இவர்கள் தமது பிராணனை யமன் அறியாதபடி மூடிக்கிடக்கும் சுழிமுனையைத் திறந்து அதன் வழியாகச் செலுத்தி மறைத்து வைத்திருப்பர்.

மனித உடலின் புறத்தே தோன்றும் நவ வழிகளும் இயற்கையாக திறந்திருக்க இம் மேல் வாயில் மாத்திரம் மூடிக்கிடக்கும். இதனைத்திறந்து, குருபிரானே பிராணா யாம வித்தையை போதிக்கவல்லர். இக் குருவருளால் இடகலை, பின்கலை தவிர்ந்த சுழிமுனை ஆகிய நடுநாடி மார்க்கத்தை அறிந்து அதில் பிராணனை நிரோதித்தல் வேண்டும். இதுவே உண்மையான பிராணாயாமம்.

பிராணாயாமத்தில் நான்கு தன்மைகள் கவனிக்கற் பாலன. அவை பூரகம், கும்பகம், ரேசகம், சூனியகம், எனப்படும். பூரகம் என்பது சுவாசத்தை உள்ளிழுத்தல், கும்பகம் சுவாசத்தை உள்ளடக்கல். ரேசகம் சுவாசத்தை வெளியடக்கல். சூனியகம் அதை ரேசக பூரக மின்றி நிறுத்தல். இந் நான்காவது நிலையே மிக உயர்ந்தது. இது தான் உண்மையான சிவ இராச யோகம் எனப்படும்.

பிராணாயாமத்தை பலர் பலவிதமாகப் பயின்று வருகிறார்கள். சிலர் தாரகமந்திரங்களை மனதில் உச்சரித்தபடி செய்கிறார்கள். சிலர் வாயால் மெதுவாக மந்திரித்தபடி செய்கிறார்கள். இன்னுஞ் சிலர் பெரும் ஓசை யுடன் ஓதிச் செய்வர். இவற்றுள் மனதில் தியானிப்பதுதான் உத்தமம். இதை வாயுசங்கிதை பின்வருமாறு விளம்புகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" உன்னியே உள்ளத்தினிற் செபித்தல் உத்தமம்
மன்னுவோர் கேட்டிடாவகை செபித்திடல்
முன்னிடின் மத்திம முழங்க ஓதியே
அன்னது செபித்திடல் அதமமாகுமால்."

– வாயுசங்கிதை

யோக அப்பியாசத்திற்கும், தேக அப்பியாசத்திற்கும் அதிக வேறுபாடுண்டு. யோக அப்பியாசம், சுவாச யோக முறையை (பிராணாயாமம்) அனுட்டித்துப் பயில்வது. தேக அப்பியாசம் பிராணாயாமத்தை அனுட்டிக்காமல் பயிலுவது.

யோக அப்பியாசங்களை சுவாச யோக முறையை விலக்கிப் பயிலும்போது அது தேக அப்பியாசமாகிறது. அத்துடன் சில சமயங்களில் உடல் நோய்களையும் உண்டு பண்ணுகிறது. ஆதலினால் யோக அப்பியாசிகள் விதி முறையுடன் பயிலல் வேண்டும்.

யோக ஆசனங்கள் தத்துவங்கள் நிறைந்தன. தத்துவங்கள் புரியாது பலர் பழக முற்படுவதால்தான் பல இன்னல்களுக்கு ஆளாகிறார்கள். இப்படி இன்னல்களுக்கு ஆளானவர்கள் தம் தவறை மறைத்து யோக அப்பியாசம் உடலுக்கு ஏற்றதல்ல, அது பல இடையூறுகளைத் தருவது, என்ற ஒரு தப்பபிப்ராயத்தை மக்களிடையே பரப்பி வருகிறார்கள்.

யோக அப்பியாசத்தை தகுந்த ஆசான் ஒருவனின் கீழ் இருந்து பழகுதலே சாலச் சிறந்தது. நூல்களைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துச் செய்யுஞ் சிலர் தப்பான பயிற்சி முறையால் வயிற்றில் சுவாசந் தங்கி குடல் நோய்களுக்கு ஆளாகு கிறார்கள்.

யோக ஆசனம் ஆன்ம சக்தியோடு கூடியது. பூமியின் ஆகர்ஷ்ணசக்தி ஜீவசக்தியாகிய ஆன்ம சக்தியை கிரகித்துவிடும். அதனால் தான் யோக அப்பியாசிகள் மான் தோலிலோ, தருப்பைப் புல் ஆசனத்திலோ இருந்து பழக வேண்டும் எனவற்புறுத்தப் படுகிறார்கள்.

"தொட்டுக் காட்டத வித்தை கொட்டுப் போட் டாலும் வராது" என்ற ஆன்றோர் வாக்கிற்கு அமைய ஒர குருபிரானை நாடி அவரது முன்னிலையில் பயிலுதல் அவசியம். "ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது" என்பதற்கு அமைய நூற் படிப்யோடு பயிற்சியில் இறங்குபவர்கள் துன்பத்தை அடைகிறார்கள்.

ஆதலின் குருவருள் கொண்டு உள்ளறிவு பெற்ற உண்மையான இராஜயோகம் பயின்றவர்க்கே ஞானமாகிய மோக்க வீட்டின் வாழ்வு. அருளொளியாம் சிவப்பிரகாச நிலை ஏற்படும் என்பது திண்ணம். மற்றையவை மாயை.

* * * * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு அருளொளி நிலைய வெளியீடான "அருளொளி" மலரில், பிரசுரமான கட்டுரை.
1967 – நவம்பர் மாதம்.

# வர்ணாச்சிரமம்

இந்த வர்ணாச்சிரம தர்மம் எனும் சாதிப் பாகுபாடு இன்று நேற்றல்ல இதிகாச காலந்தொட்டு இருந்து வரும் ஒரு பிரச்சினை. இதற்கு தீர்வு காண்பது என்பது சுலபம் அல்ல. அது அரசின் கையிலோ, சட்டத்தின் கையிலோ, தங்கியிருக்கவில்லை. அது அறிவின் பாற்பட்டது. சிந்தித்து தெளிவுற வேண்டியது.

" சாதி இரண்டொழிய வேறில்லை
சாற்றுங்கால் நீதிவழுவா நெறிமுறையின் மேதினியில்
இட்டார்பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி"

என்றார் ஔவையார்.

" பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழின் வேற்றுமையான்"

என்றார் வள்ளுவர்.

" சாதியும் மதமும் சமயமும் பொய்"

என்றார் இராமலிங்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாதிகள் இல்லையடி பாப்பா"

என்றார் பாரதி.

சங்ககாலத்திற்கு முந்திய காலத்தில் இப்பாகுபாடு இருக்கவில்லை என்கின்றனர் சிலர். இக்கொடியவழக்கு ஆரிய படையெடுப்பின் பயனாய் ஏற்பட்ட கொடுமை என்பாரும் உளர். ஆராயுமிடத்து இவற்றில் எவ்வளவு உண்மையிருக்கிறது என்று வலியுறுத்த இயலாததாக இருக்கிறது. சங்ககாலத்தில் அமைந்த பாகுபாடு நிலத்தை அடிப்படையாகக் கொண்டதென்பார் புலவர். குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை முதலாம் ஐவகை நிலங்களை வகுத்து அவற்றின் கண் வாழ்ந்த மக்களை குறிஞ்சியில் குறவரும், முல்லையில் வேடரும், நெய்தலில் வலைஞரும், மருதத்தில் உழவரும், பாலையில் வணிகரும் எனப் பகுத்தனர், இப் பாகுபாடு நிலத்தியல்பதாகும் என்பார் சிலர். செய்தொழில் வேற்றுமை யினால் என்பார் சிலர். ஆனால் வள்ளுவர் கூற்றுப்படி இப்பாகுபாடு செய்தொழில் வேற்றுமையினால் ஆனது என்று முடிவாகிறது.

"பிறப்பொக்கும் எல்லாம் உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழின் வேற்றுமையான்."

– குறள் 972

ஆனால் இப்பாகுபாடு பிற்காலத்தில் வழக்கொழிந்து போயிற்று. பிற்காலத்தில் வர்ணாச்சிரமம் தோற்றி நால் வகை வர்ணத்தாரை ஆக்கி அவர்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பித்து வேற்றுமை கண்டது. இது ஆரியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணிப்பென்பாருமுளர். இக்கூற்று ஓரளவு உண்மையே யாயினும் அதன் உட்பொருளை ஆய்ந்து உணர்ந்து, எப்பொருளிலும் உண்மையைக் காண்பது தான் அறிவு. பார்ப்பான், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற பாகுபாட்டினைத் தனித்தனியே எடுத்தாராய்வோம்.

முதலாமவன் பார்ப்பான் – அந்தணன். இவன் உயர்சாதி மேலோன் எனக்கருதப்பட்டான். காரணம், அவன் அறவோனாக, செந்தண்மை பூண்டொழுகுவோனாக இருந்தமையால். அறவோன் என்றால் அறத்தை வலி யுறுத்துபவன். பேரறமாம் வேதத்தைக் காப்பவன் என்பது விரிவு. அவன் அரசனுக்கும் பிரசைகளுக்கும் அறவுரை வழங்குபவனாதலின் அறவோனாயினான். குருவாயினான். அவனிடம் பாகுபாடற்ற செந்தண்மை இருந்தது. செவ்விய தண்ணளி பூண்டவர் என்பது பொருள். ஆதலின் அவன் உயர்ந்தோனாக – உயர்குடிப்பிறந்தோனாக, அரசன் முதல் அவன் பிரசைகள் வரை எல்லாராலும் ஏற்றப்பட்டான் – போற்றப்பட்டான். இது ஒரு விரிவு. இதன் தத்துவ விரிவை "ஆராயின், இப்பாகுபாடும் செய்தொழின் வழியதே என்பது புலனாகிறது. பார்ப்பான் பார்க்குந் தொழிலை உடையோன் என்பது பொருள் – அவன் செந்தண்மை உடையவன். நல்லதையும், தீயதையும், உயர்வையும், தாழ்வையும் வேற்றுமையின்றிக் காண்பவன். அறவோன். நன்மை தீமையை கண்டு நடுநிலை வழி காட்டுபவன். ஆதலின் அவன் பார்க்கும் தொழிலைச் செய்யும் கண்களை ஒப்பான். கண்கள் நம் அங்கத்தில் உயரிய இடத்தில் பிற அவயங்களுக்கு மேல் தலையின் மேற்பகுதியில் இருப்பன எனவே அவன் மேலோன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தோன் என்பதாயிற்று. ஆதலின் அண்டத்தில் பார்ப்பானாய் இருப்பவன் பிண்டத்தில் பார்க்கும் கண்மணிகளாய் இருக்கின்றான்.

இரண்டாமவன் சத்திரியன் – அரசன் முறை செய்து காப்பவன். அறனிழுக்காது அல்லவை நீக்குபவன் – சத்தியன். பசுக்கன்றைக் கொன்ற தன் மகனைத் தேர் ஏற்றிக் கொன்ற மனுவும், தானே குற்றவாளி எனக்கண்டு தன்கையைத் துண்டித்த பொற் கையனும், தன்தவறால் கோவலன் கொலையுண்டான் என உணர்ந்து உயிர்நீத்த பாண்டியனும், கொடுத்த வாக்கைக் காப்பதற்காக சுடலைகாத்த அரிசந்திரனும். இப் பண்பினர் அன்றோ! இவர்கள் சத்தியத்தைக் காத்து நீதி வழுவா நெறிமுறை நின்றவர்கள். இறை என மக்களால் வழுத்தப்பட்டவர்கள்.

முன்னோாக்கும் பினோர்க்கும் முதல்வர் அன்றோ! ஆதலின் அவன் இரண்டாமவனாக வைக்கப்பட்டான். இதை உணர்ந்தன்றோ பொய்யாமொழி வள்ளுவனும் தன் திருமறையில் அறவியலுக்கு அடுத்து பொருளியல் அமைத்து இறையாம் மன்னன் இலக்கணத்தை விளக்கு கிறார். இதன் தத்துவத்தை ஆராயின், சத்திரியன் – சத்தாகிய உண்மையை ஆய்ந்து உணரும் தன்மையை உடையவன். அறவோர் அறிவுறுத்த வழக்கைச் செவி மடுத்து நீதி வழங்குபவன். உண்மையைக் கேட்பவன். கேட்கும் தொழிலை உடையவன். சத்தத்தைத் திரிபு செய்து உணர்பவன் எனினும் பொருந்தும். இத்தகையன் பார்ப்பானுக்கு இரண்டாம் இடத்தில் செவியாய், செவ்வியனாய் இருக்கிறான். அண்டத்தில் அரசனாய் – செவ்வியனாய் இருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாமவன் வைசியன் – வணிகன். இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்து வகுத்தலுமாம் நாற் தொழிலையும் மன்னவன் செய்ய உறுதுணையாய் இருப்பவன். ஏற்றுமதிப் பொருட்களை இயற்றி – ஆக்கி, அதனை ஏற்றுமதி செய்து பொருட்கள் ஈட்டியும், பண்ட மாற்றுச் செய்து தனந்தேடியும், பார்ப்பான், சத்திரியன், சூத்திரன் முதலாம் எல்லோர்க்கும் வேண்டும் பொருள் தேடித் தருபவன். பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை ஆகவே இவ்வுலகு வாழப்பேருதவியாக இருப்பவன். அரசர்க்கு அணிகலனும், பிரசைகளுக்கு உண்கலனும் பெற்றுத்தரும் இவன் மூன்றாம் இடம் பெற்றான். தன் தொழிலால் உலகத்தாரை வாழ்விக்கும் இவனது தத்துவம் உணர்வோம். இவன் பண்டமாற்றுச் செய்பவன். உள்ள பொருளை ஏற்றி அதற்கு மாற்றுப் பொருள் கொணர் வோன். எமதகத்தே உற்ற கரியமலவாயுவை வெளியேற்றி அதற்கு மாற்றாக பிராணவாயுவை உட்கொணரும் சுவாசகன் – நாசி. அண்டத்தில் வைசியன் பிண்டத்தில் சுவாசகன்–நாசியாய் இருக்கின்றான்

நான்காமவன் சூத்திரன் – பாட்டாளி. அரசன் முதல் அகிலத்தார் எல்லாரும் வேண்டும் உணவை ஆக்கியும், போர்வந்தகாலை நாடுகாத்தும் பணிபுரிபவன். வீரன். உழவன். இவன் நாட்டின் சூத்திரம் போல் விளங்கு பவன். உயிர் நாடியாக இயங்குபவன். அவனின்றி நாடேது? அரசேது? அதனால் சூத்திரன் எனப்பெயர் கொண்டான். அண்டத்தில் சூத்திரன், பிண்டத்திலும் சூத்திரனாக, உழுதுண்டு வாழ்கிறான். போர் செய்கிறான். நாடுகாக் கிறான். நாம் உண்ணும் உணவை நன்றாய் உழுது புரட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்பவன். எதிர்ப்போரை வைதுபோர் செய்பவன். ஆபத்துக் காலத்தில் கூக்குரலிட்டு எம்மைக் காப்பவன். பேசுபவன் – நாமகன். அண்டத்தில் சூத்திரன் பிண்டத்தில் நாவாக அமைந்திருக்கிறான்.

அவ்வாறு அண்டத்தில் உள்ளதை பிண்டத்தில் கண்டு உண்மை உணர்ந்தால், வேற்றுமைகள் இங்கேது? சாதிச் சண்டைகள் ஏது? சமயச் சச்சரவுகள் ஏது?

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல்லவர்"

குறள் 973

என்ற வள்ளுவன் மொழிக்கொப்ப மேல்குலம் எனப்பெருமை பேசிக் கீழ்மைத் தொழில் செய்வோரும் கீழோரே. கீழோராயினும் மேன்மையான நோக்கும் செய் கையும் உடையர் மேன்மக்களே. ஆதனூர்ப் பறையனும், வேடன் கண்ணப்பனும் அந்தணருக்கே குருவானமையும் இங்கு நோக்கற்பாலது. ஆதலின் கீழோர் மேலோர் என வேற்றுமை காணாது, இறை புதல்வர்–பிறப்பில் ஒத்தவர் என்று சமரசங் கண்டு தூய வாழ்வு வாழ்தல் கடை.

"மன நலம் நன்குடையராயினும் சான்றோர்க்கு
இன நலம் ஏமாப்புடைத்து."

குறள் 458

என்பதற்கு இயைய மனநலத்துடன் தான் பிறந்த இனத்திற்கு ஏமாப்பெடுத்துக் கொடுப்பது தான் நம் கடன் நந்தன் தனதினத்திற்குத் தேடிய பெருமையை யார் மறுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்? சண்டேஸ்வரர் இடைச்சேரிக்கு தேடிய பெருமையும், கண்ணப்பன் வேடர் குலத்திற்கு ஆக்கிய பெருமையும், உலகறிந்ததே.

இஞ்ஞான்று நாமும் பிறந்த பொன்னாட்டிற்கும், பெற்ற இனத்திற்கும் பெருமை தேடிக் குலநலம் பேசித் தாழ்த்துவோரைத் தலை வணங்கச் செய்வதன்றோ மேல். அதை விடுத்துச் சண்டையிட்டுப் பிளவுபடுவது நம் அறியாமையன்றோ? ஆதலின் நாம் அன்பை வளர்த்து, அஹிம்சையைப் பயின்று, அருளொளியில் இணைந்து, பெருவெளியில் கலந்து, பேரின்பப் பெருமை காண்பதே கடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> தமது புத்திரன் சிவகுரு நாதனுக்கு அவ்வப்போது வரைந்த அறநெறிகளிற் சில.

# தந்தை சொல் மந்திரம்

அருமை மகனே! ஆதியில் அன்னை தந்தையர்களின் நேசத்தாலாகிய உடம்புகளைத் தாங்கிய மக்கள் யாபேரும் தம்மைச் சமமாகவே கருதி யொருவரை யொருவர் இம்சிக்காமலும் வஞ்சிக்காமலும் இருந்தார்கள். அவர்களிடத்தில் பொய், களவு, கோபம், பொறாமை, புறங்கூறல் முதலிய குற்றங்கள் தலை காட்டவில்லை. ஆதாலாலவர்கள் தம்மைப்போல் பிறரையும் நேசித்து அவரவருள் அழிவற்ற பொருளா யுள்ள அறிவு சொரூபமாயுள்ள ஆன்மாவை வழிபடு தெய்வமெனக் கருதி வாழ்ந்தார்கள். அதனால் அவர்கள் குன்றாத வாழ்வுங் குறையாத செல்வமும் பொருந்தி நீடித்த காலம் நோயின்றி வாழ்ந்து ஈற்றில் ஆத்ம சோதியிற் கரந்து நிர்விகற்ப சமாதியெய்தினார்கள்.

மகனே! உலகில் மண்ணும், பெண்ணும், பொன்னும், உடலும், உயிரும், ஆவியும், உற்றோரும், மற்றோரும் சர்வமும் கடவுள் மயமாயிருக்கிறது. அஞ்ஞான இருளால் மறைப்புண்டு இருக்கும் உயிர்களிதை உணர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லை. உடல்கள் யாவும் ஆலயங்கள், உயிர்கள் யாவும் சிவசொருபங்கள். அவற்றை இயக்கும் ஆவியே திருவருட் சக்தி. அன்பும் அறமுமே அஞ்ஞானத்தை யோட்டி மெய்ஞ் ஞானத்தை ஊட்டி அவற்றை உணரவைக்கும். அன்பும் அறமுமே அழியாப் புகழுடம்பைத் தரும். அன்பும் அறமுமே இகத்திலும் பரத்திலும் இன்பத்தை அடையச் செய்யும். அன்பும் அறமுமே இல்லறத்துக்குப் பண்பும் பயனுமாயுள்ளன. அன்பு–சிவம், அறம்–சக்தி இவற்றை மரணபரியந்தங் கைவிடாதிருத்தலே யுக்தி.

மகனே! அன்றும் இன்றும் என்றும் உள்ள பொருள் ஆத்மா ஒன்றே. அது உபாதி நிலையில் சீவனாயும், அது அற்ற நிலையில் சிவமாயும் அமைகிறதென்று அறிந்து கொள். "மனித குமாரனே தேவகுமாரன்" என்றார். ஜீவ ரட்சகராம் ஏசுநாதர். இதைச் சிவபாதவிருதயரின் குமாரன் ஞானசம்பந்தன் சிவகாமியம்மையாரின் திருமுலைப் பாலையுண்டு தானுஞ் சிவசுதனென்று நிரூபித்திருக்கிறார். அவரைப் போல் நாமும் அன்னை தந்தையரின் நேசத்தால் ஆகிய உடம்பைத் தாங்கியவர்கள் தானே. ஏன்? நாமும் அவரைப் போல் சிவசுதர்களாகக் கூடாது? அலையா மனத்தால் சிந்தித்துப் பார்த்தால் விளங்கும்.

மகனே! தோன்றின்மறையும் புவிப்பொருளை மெய்யென்று இருப்பவர்கள் தோன்றி மறையாத மெய்ப் பொருளைக் காட்டினால் இது பிறரையேமாற்றச் செய்யும் தந்திரம், கண்கட்டு வித்தை, செப்படி வித்தை யென்று சொல்லி ஏளனஞ் செய்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது அங்கதேயத்தில் நீ பிறந்தநாள் தொடக்கம் உனது வழிபாட்டுக்குரிய கந்தன் ஆலயம் பூட்டப்பட்டிருக்கிறதே! அவ்வாலயத்தைத் திறந்து அங்காரோ கணித்திருக்கும் முருகப் பெருமானை வழிபடும் உரிமை உனக்கேயுரியது. அவ் ஒன்று உன்னுள் இருக்கவும் புற ஆலயங்களைத் தேடியேன் அலையவேண்டும்.

மகனே! மனவடக்கம், நாவடக்கம், மூச்சடக்கம் என்பன சாதனைக் குரியவை. இச்சாதனை முறையை குருமூலம் அறிந்து, நாட்பழக்கஞ் செய்துவரின் சகல சுகுணங்களோடும் கூடி வாழ்ந்து என்றும் இருக்கலாம், அல்லது நிர்விகர்ப்ப சமாதியுட் புகலாம் அல்லது அருட்பெரும் சோதியில் கலக்கலாம். இவை தான் அயனெழுத்தை மாற்றும் மார்க்கம்.

மகனே! அருளுக்கும் மருளுக்கும் தொண்டு செய்ய விரும்பிய நீ எதையும் சரிவரச் செய்யமுடியாமல் இரு படகுகளில் கால்வைத்தவன் போல அடைந்த துன்பங்களை எண்ணிப்பார்த்து அருளோடு மாத்திரம் உறவாடப் பழகு. அருளினால் மட்டுமே மருள் அகன்று ஒளி பிறக்கும். அது அகலாதவரை மேலவரின் அருளாசி கிட்டாது. அருளாசி பெற்றோர் காயமாயம் கழித்தற் பொருட்டு தென் புலத்தாரையும் ஓம்பலாம். அதற்குச் சற்பாத்திரம் அறிந்து தானஞ் செய்யவேண்டும். அன்பும் அறமும் சினவாமையும் உள்ளவன் குடுபத்தனாயினும் துறவியே.

மகனே! இனிது இனிது ஏகாந்தம் இனிது என்றார் மூதாட்டி ஔவையார். ஏகாந்த மென்பது ஒன்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயிலையும் ஐம்புலக் கதவையும் ஒரு மந்திரத்தால் அடைத்து, மூச்சுப் பேச்சற்ற நல்லிடத்தில் தான் தானாய் தனியனாய் நிற்றல்.

மகனே! நீ கூரிய அறிவும், சீரிய ஒழுக்கமும், ஆசாரமும், சாந்த குணமும் தழுவி, ஆசையும் அகந்தையும் அழுக்காறும் சீற்றமும் அகற்றி உன்னுயிர்போல் மன்னுயிரையும் பேணிப் பணிபுரிவாயாக! அப்படிச் செய்தால் நீ குருவருளும் திருவுருவும் பெற்றுத் தீர்க்கதரிசியைப் போல் திரிலோக – திரிகால வர்த்தமானங்களை உணர்ந்து சம்மனசு ( சமசிந்தனை உடையவர் ) களோடு உறவாடும் ஆற்றல் பெறுவாய். பின் உத்தமர்கள் உன்னைப் போற்றும்படியாக, அருளொளி மாதா கால தேவதையாய் நின்று, உனக்கு வேண்டியதனைத்தையும் அருள்வாள்.

மகனே! மனிதருள் இன்ப துன்பங்களை நல்கும் நவக் கிரகங்களாய் அமைந்துகிடப்பன. அவரவர்களின் அந்தக் கரணங்களும், ஐம் (பொறிப்) புலன்களுமேயாகும். அவற்றுள் தேய்வு வளர்ச்சியோடு கூடிய சந்திரனே (மதியே – அறிவே) அறிவும் அறியாமையுமுடைய மனமாகும். மனதை நல்வழிப் படுத்த நல்லொழுக்கம் பயில வேண்டும். நல்லொழுக்கம் இல்லாதவருக்குச் சாதகம் (சாது + அகம்) அல்லது ஜோதிடம் (ஜோதி + இடம்) பார்ப்பது எவ்வண்ணம் ஏற்புடைத்தாகும். அடியேன் இவை இரண்டையும் அறமறந்து சும்மாயிருக்க விரும்புகிறேன்.

மக்களிடையே அஞ்ஞானமும் விஞ்ஞானமும் நவ நாகரீகப் போக்கை உண்டாக்கி மெய்ஞ்ஞானத்தை மறைக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்துவிட்டன. மருள் அருளை மறைப்பது சகசந் தானே? அருட் செல்வமே ஆத்ம லாபம். ஒருவன் தன் ஆத்மாவை இழந்து அகிலம் முழுவதையும் ஆதாயமாக்கிக் கொள்வதால் அடையும் பயன் என்ன?

சத்தியமே தெய்வமென்று உணர்ந்த காந்தியடிகள் தீயதை நீக்கித் தூயதைப் பேணி, அரிய சாதனை செய்து, தனது நாடு மட்டுமன்றிப் பல நாடுகளும் சுதந்திரமெடுக்க வழி தேடினார். ஆதலின் சத்தியம் என்பது தெய்வம். அதை உணர்ந்தவன், தன்னை விழுங்கி வரும் தீயபழக்கங்களை நீக்கிவிடும் புனிதன் ஆவான். சகல சுகுணங்களோடும் கூடி இகபரவின்பங்களுக்கு அருகதையாவான் என்பது உறுதி.

மகனே! சுயநலம் விட்டு பிறர் நலம் கருதுவோன் உலகம் மெச்சும் எல்லா நலன்களும் பெற்று இன்புற வாழ்வான் என்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை.

உண்ணா விரதம். என்பது உண்ணாமுலையாளுடன் அண்ணாமலையானைத் தரிசித்துச் சருகும் (சரம்-காற்றும்) புனலும் (மண்டையில் ஊறும் பால் அமிர்தம்) அருந்தித் தவஞ் செய்தலாகும். இவ்விரகசியத்தையே மாணிக்கவாசக சுவாமிகள் தமது குருநாதரின் தடத்த இலக்கணமாகக் கருதி,

"மேலை வானவரும் அறியாததோர்
கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே"

என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் ஞானச் சுதனே! தவத்திரு சித்ரமுத்தடிகளின் நிலையும் மேற் கூறிய நிலையேயாகும். இந்நிலையை அடைய முடியாதவர்கள் தமது சிந்தையை அவர் திருவுருவுக்காக்கிக் கண்களை அவன் திருவடிப் போதுக்காக்கிப் பேரின்பமடைய வேண்டும். அதுவும் முடியாதவர்கள், மனதை ஒரு நிலைப்படுத்தி "ஓம்நமசிவாய" என்ற தாரக மந்திரத்தை காலை மாலை இயன்ற நேரம் ஜெபித்து வந்தால் போதுமானது.

ஆன்மா வொன்றே யாவரிடத்தும் அந்தரியாமியாய், எவற்றையும் ஆக்கி, அழித்து, ஆசுஉடன் அடங்கக் காக்கும் நாயகனாய் இருக்கிறது. அதுவன்றி ஓர் அணுவும் அசையாது. ஆகையால் யாரிடத்தும் சாதி மத பேதம் பாராட்டாது ஆன்ம நேயம் பாராட்டி அன்பாயிருந்து அவர்களுக்கு உங்களாலாகக் கூடிய நன்மைகளைச் செய்யுங்கள். ஆகாயத்து வெய்யோன் யாபேருக்கும் பேதமின்றித் தனது அனலையும் ஒளியையும் பயன்படச் செய்தாலும் தனது தானத்தை விட்டகலாதிருப்பது போல் நீங்களும் உங்கள் உன்னத நிலையின்னின்று வழுவா திருங்கள்.கீழிருந்து அந்நிலைக்கு வரவிரும்புகிறவர் களுக்குத் தடங்கலாயிராதீர்கள். **இவ்வுண்மை நிலையை உலகம் அனுசரித்தால் வேற்றுமைகள் ஒழிந்து ஒற்றுமை ஓங்கிச் சாந்தி நிலவும்.** இதை விட்டு "சாந்தி சாந்தி" யென்று ஓலமிடுவதால் ஓர் பயனுமில்லை என்றறிந்து கொள்ளுங்கள்.

---

COLOURDOTS ( PVT) LTD 31/21, DAWSON STREET, COLOMBO - 2. TEL : 331439



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி
எல்லாம் திருவருட் சம்மதம்



"உள்ளொளி தோன்றில் உணரில் அருளொளி
அவ்வொளி ஆதி ஒளி." – ஔவை குறள்

# தத்துவஞானத் தவச்சாலை

# THEOSOPHICAL HERMITAGE

## THE COLOMBO ARULOLI NILAYAM

31/21, Dawson Street, Colombo - 2. Tel. : 331439

---

கார்த்திகேயனின் காயகற்பம் விலை ரூபா. 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org